**Illustration:1**

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THENI.**

**Case No: SC 124/2024**

**Prosecution Witness 2 (LW 2)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ராஜேஷ்குமார் | ஜாதி | : | -- |
| அப்பா பெயர் | : | திரு.அசோகன் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா /மாவட்டம் | : | | வயது | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.02.2025.

( எதிரிகள் ஆஜர்)

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அடையாளம் காணப்பட்டு ஓட்டுநர் உரிமம் மூலம் ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

முதல் விசாரணை –

நான் போடிநாயக்கனூரில் ஜெ.கே.பட்டியில் குடியிருக்கிறேன். நான் பர்னிச்சர் கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். அசா1 முருகேசனை எனக்கு தெரியும். கடந்த 16.10.2023 ஆம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் நான் என் கடையில் இருக்கும் போது அசா1 முருகேசன் என் கடைக்கு வந்தார். என்னுடைய இருசக்கர வாகனத்தை வேலை பார்த்தது சம்பந்தமாக பணம் வாங்க வந்தார்.

அசா1 என்னுடன் பேசி கொண்டுருந்தார். 1 வது எதிரி தமிழன் 2,3 வது எதிரியை அழைத்து கடைக்கு வந்தார். நான் அசா1 னுடன் பேசிக்கொண்ருக்கும் போது 1 வது எதிரி தன் கையில் கொண்டு வந்த அருவாளை வைத்து அசா1 முருகேசனை முதலில் முதுகில் வெட்டினார், முருகேசன் திரும்பிய உடன் மீண்டும் வெட்டும் போது அவருக்கு வலது கையில் காயம் ஏற்பட்டது. நாங்கள் சத்தம் போட்டோம். என்னுடைய கடையில் வேலை பார்த்த மற்றொருவரும் சத்தம் போட்டோம்.

1 வது எதிரியை தள்ளி விட்டோம். கூட்டம் அதிகமாகவும் எதிரிகள் ஓடி விட்டனர். அசா1 னின் தம்பி இளஙகோவனுக்கு தகவல்

சொன்னோம். பக்கத்தில் ஷோரூமில் வேலை பார்க்கும் ஒருவர் வந்தார். காயம் பட்ட நபரை இரு சக்கர வாகனத்தில் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அன்றைய தினமே போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி. இல்லை.**

மறு விசாரணை இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 07.02.2025 அன்று வெள்ளிக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

GOPINATHAN S

Digitally signed by GOPINATHAN S
Date: 2025.02.07 16:01:46 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
07.02.2025